# النحو الواضح

## الجزء الأول- முதலாவது பாகம்

## தொடர் - 2

**ஆய்வு :**

**الْبُسْتَانُ جَمِيْلٌ என்ற முதலாவது இணைப்பை மட்டும் நாம் எடுத்துக்கொண்டால் , இரண்டு வார்த்தைகளால் இணைந்திருப்பதை நாம் பார்க்கலாம். இதில் الْبُسْتَانُ என்ற வார்த்தையை மட்டுமோ அல்லது جَمِيْلٌ என்ற வார்த்தையை மட்டுமோ நாம் எடுத்துக்கொண்டால் , அதில் தனித்த அர்த்தத்தைத் தவிர நாம் விளங்கமாட்டோம். உரையாடுவதற்கும் இந்த ஒற்றை வார்த்தைப் போதுமானதாக ஆகாது. இவ்விரண்டு வார்த்தைகளையும் இணைப்பிலுள்ள முறையின் அடிப்படையில் நாம் இணைக்கும் போது தான் நமக்கு முழுமையான அர்த்தமும் , அதன் பயனும் கிடைக்கிறது. الْبُسْتَانُ என்ற தோட்டமாகிறது جَمِيْلٌ என்ற அழகின் மூலம் வர்ணனை பெற்றிருக்கிறது.**

**இதனால் தான் இதற்கு “பயனுள்ள வாக்கியம்” (الْبُسْتَانُ جَمِيْلٌ) என்று பெயர்ச்சொல்லப்படுகிறது. இவ்விரண்டு வார்த்தைகளில் ஒவ்வொன்றும் இந்த வாக்கியத்தில் ஒரு பகுதியாகக் கருதப்படும். இவ்வாறு தான் மீதமுள்ள உதாரணங்களிலும் சொல்லப்படும்.**

**இதன் மூலம் ஒரு வார்த்தை மட்டும் உரையாடுவதற்கு போதுமானதாக ஆகாது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். ஏனெனில் மனிதன் முழுமையான பயனை அடைந்து கொள்வதற்கு இரண்டு வார்த்தைகளோ அல்லது அதற்கு மேற்பட்ட வார்த்தைகளோ இருப்பது அவசியமாகும்.**

**قُمْ , اِجْلِسْ , تَكَلَّمْ. போன்ற வார்த்தைகளை வெளிப்படையாகக் காணும்போது ஒற்றை வார்த்தையாகவும் , உரையாடுவதற்கு போதுமானதாகவும் இருக்கிறது. ஆனால் உண்மையில் இவைகள் ஒற்றை வார்த்தை கிடையாது. இவை இரண்டு வாக்கியங்களால் இணைக்கப்பட்ட ஒரு வாக்கியம் ஆகும். அவற்றில் ஒன்று قُمْ என்பதைப் போல் வெளிப்படையாக மொழியப்பட்டது ஆகும்.**

**மற்றொன்று வெளிப்படையில் மொழியப்படாதது ஆகும். அதுவாகிறது "أَنْتَ" (நீ) என்பதாகும். இது மொழியப்படாவிட்டாலும் கேட்கக்கூடியவன் வாக்கியத்தில் புரிந்துகொள்வான்.**

குறிப்பு : اجْلِسْ என்றால் அமரு என்று பொருள். அதாவது இது வெளிப்படையில் ஒற்றை வார்த்தையாக இருந்தாலும் “நீ அமரு” என்ற இணைக்கப்பட்ட இரு வார்த்தைகளாகவே உள்ளது. அதே போல் தான் மற்ற இரு வார்த்தைகளும்.

***<u>الْقَوَاعِدُ - சட்டங்கள்</u>***

1. வார்த்தைகளால் ஆன இணைப்பு என்பது முழுமையான பயனை தருவது ஆகும். இதற்கு الْجُمَلَةُ الْمُفِيْدَةُ - பயனுள்ள வாக்கியம் என்றும் வாக்கியம் كَلَامًا- வாக்கியம் என்றும் சொல்லப்படும்.
2. الْجُمَلَةُ الْمُفِيْدَةُ - பயனுள்ள வாக்கியமாகிறது இரண்டு வார்த்தைகளோ அல்லது அதற்கும் மேற்பட்ட வார்த்தைகளோ இணைந்ததாக இருக்கும். அதில் ஒவ்வொரு வார்த்தையும் ஒரு பகுதியாக கருதப்படும்.